6th August 1929]

APPENDIX XV.

[Vide item XII—Papers laid on the table of the House at page 93 supra.]

Letter from N. P. Venkatakrishna Reddiyar, Honorary Organizer of Panchayats, Sathambadi, Gingee taluk, to the Registrar-General of Panchayats, dated 6th February 1929.

1. சமுகத்திய 1929-வருடு ஜனவரி மீ 10உயுள்ள 1760-2-ம் நம்பருள்ள ரிமைண்டரில் கண்ட 1928-ம்வருடு டிசம்பர் மீ 3உயுள்ள 41721-1 நம்பருள்ளதும் 1928-ம்வருடு டிசம்பர் மீ 3உயுள்ள Endorsement No. 596-1 எண்டார்சுமென்டுகளடங்கிய நாகந்தூர் ஆதிதிராவிடர்களால் கொடுக்கப்பட்ட பெடிஷன்களின்படி 1929-ம்வருடு ஜனவரி மீ 30உயில் நாகந்தூர் கிராமத்துக்குப் போய் ஷை பெடிஷன்களில் கண்ட அம்சங்களைப்பற்றி விசாரிக்கப்பட்டது.

2. ஷை பெடிஷன்தார்களை காலை 11-மணி முதல் இரவு 8-மணி வரையில் தோட்டி தலையாரிகளைக்கொண்டு கூடியவரையில் தேடி பார்த்தும் தண்டோராபோடச் செய்தும் அவர்கள் வராததினால் ஷையார்களை விசாரிக்கக் கூடவில்லை. அவர்கள் இந்த பெடிஷனை யாருடைய் கற்பனையின்பேரிலோ கொடுத்துக்கொண்டதாகவும், அதன்படி சொல்வதற்கு சாத்தியப்படாமல் வேண்டுமென்றே மறைந்துகொண்டதாகவும் விசாரித்ததில் ஏற்படுகிறது.

3. மேலும் அந்த சேரியிலிருக்கப்பட்ட வயதானவர்களும் சேரித்தலைவர்களுமான 9 ஆதிதிராவிடர்களையும், மணியம், கர்ணம், வேட்டிசும்பு மணியம் இவர்களையும் வரி விதிக்கப்பட்டு தகராரிலுள்ள ஷையூர் நடேச செட்டி என்பவரையும் விசாரிக்கப்பட்டது.

4. ஷை யார்கள் ஸ்டேட்மென்டில் வில்லேஜ் பஞ்சாயத்து எலெக்ஷன் காலத்தில் பெடிஷன்தார்களும் மற்றும் சேரியிலுள்ளவர்களும் வந்திருந்ததாகவும், தங்களுக்கு மெம்பர் வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டதாகவும் சொல்லியிருக்கிறார்கள். மணியக்காரர், கணக்குப்பிள்ளை தங்கள் ஸ்டேட்மெண்டில் சேரியைவிட ஊரில்தான் ஜனத்தொகை அதிகமென்று சொல்லுகிறார்கள். இந்தக் கிராமம் நஞ்செய் புஞ்செய் சுமார் 930 எக்கரும் பேரீஜ ரூ. 2,000 உள்ளதில் ஆதிதிராவிடர்கள்மட்டும் ரூ. 130 பேரீஜ் செலுத்தக்கூடியவர்களென்றும் மற்ற 1,870 ரூபாய் ஊரிலுள்ள மெம்பர்களாயுள்ள ரெட்டிகளும் மற்றுமுள்ள குடிகளும் செலுத்துவதாகத் தெரிகிறது.

5. பெடிஷன்தார்கள் ஆக்ஷேபனையிலுள்ள வரியானது ஷையார்கள் ஸ்டேட்மென்டினாலும் ரிக்கார்டுகளை பரிசோதித்ததாலும் வரி விதிப்பதற்கு முன்பு எல்லோருக்கும் பிரசித்தப்படுத்தியிருக்கிறதென்றும் தங்களுக்குத் தெரிந்தும் யாரும் ஆக்ஷேபனை சொல்லிக்கொள்ளாததால் வரி விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், பெடிஷன்தார்கள் மணிலா வியாபாரம் செய்தது உண்மையென்றும் ஏற்படுகிறது. தற்போது வரி ஆக்ஷேபனை செய்யும் துரைசாமி செட்டி, தான் மெம்பராயிருந்த காலத்தில் தானும், இன்னொரு மெம்பரும் பெடிஷன்தார்கள் மணிலா வியாபாரம் செய்ததாக ஒரு துண்டு சீட்டில் பெயர்களை எழுதி கையெழுத்திட்டு பஞ்சாயத்தில் கொடுத்திருக்கிறார்கள்.

[6th August 1929

6. மறுபடி ஊரில் நேரிட்ட ஏதோ மனஸ்தாபத்தின்பேரில் மெம்பர் பதவியை ராஜீநாமா கொடுத்துவிட்டு தானும் வரி கொடாமல் ஆக்ஷேபித்துக்கொண்டு ஷை ஆதித்திராவிடர்களையும் தனக்கு சகாயமாய் சேர்த்துக்கொண்டு கலகம் செய்வதாக ஏற்படுகிறது. இது சம்பந்தமான கிரிமினல் கேசும் திண்டிவனம் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடந்துகொண்டிருக்கிறது. ஷை யார்கள் வரி செலுத்த சக்தியுள்ளவர்களாயிருப்பதும் தவிர அவர்கள் வேணுமென்றே ஆக்ஷேபனை செய்துகொண்டிருப்பதாகவும் தெரிகிறது. அவ்வூர் உபதேசி நெகோமியா என்பவரும் சில ஆதிதிராவிடர்களும் இதற்கு என்று கலகம் செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

7. ஆகையால் பெடிஷன்தார்களுக்கு வரிவிதி விதித்ததும், எலெக்ஷன் நடத்தினதும், நியாயமென்றும், அவர்கள் வரி கொடுக்க சக்தியுள்ளவர்கள் என்றும், அவர்கள் பெடிஷனில் சொல்லியுள்ள ஆக்ஷேபனைகள் சரியானவையல்லவென்றும், நேரில் வந்து ஆக்ஷேபனைகள் சொல்லிக்கொள்ளாமல் மறைந்திருந்ததால் சிலருடைய துர்ப்போதனைக்குட்பட்டே பெடிஷன்கள் கொடுக்கப்பட்டதாகவும் விசாரணையில் எனக்கு ஏற்படுகிறது. ஆகையால் இந்த பெடிஷனை தள்ளிவிடலாம்.

8. இவ்விதம் கலகம் நடந்துகொண்டிருப்பதால் பஞ்சாயத்து வேலைகள் நடைபெறக்கூடாமையாயிருக்கின்றன. இது விஷயமாய் பெடிஷன்தார்களுக்கு தகுந்த எச்சரிக்கை செய்து கலகம் உண்டுபண்ணுமலிருக்க உத்தரவு பிறப்பிக்கவேணுமாய் கோறலாகிறது.

PROCEEDINGS OF THE REGISTRAR-GENERAL OF PANCHAYATS.

Fort St. George, dated 13th February 1929.

R. Dis. No. 102–1.

READ—

Petition from Ayyadurai and others of Nagandur Cheri, Gingee taluk, dated 29th November 1928.

Report from the Honorary Organizer, Gingee, dated 6th February 1929.

Order.

The strength of the Nagandur Panchayat is being raised to 12 members. The petitioners are advised to compete for the seats at the time when the elections are conducted by the Honorary Organizer, Gingee.

The objections to the levy of the groundnut tax urged by the petitioners are not of any weight and the sanction accorded to its levy cannot be cancelled at this stage.

A. DURAISWAMI,
Acting Registrar-General.

To Petitioners.
,, the President, Village Panchayat, Nagandur.
,, the Honorary Organizer, Gingee.
,, the President, Taluk Board, Tindivanam, with the original election record wi his letter No. 33—T.B., dated 26th January 1929.